**அக்டோபர் – 18**

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 2025–26 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள்




- 2025–26 ஆம் நிதியாண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை தமிழக நிதியமைச்சர் சமர்ப்பித்துள்ளார்.
- இந்த மதிப்பீடுகளில் மொத்தம் 2,914.99 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு முன்மொழியப் பட்டது.
- பாரத் ஸ்டேஜ் VI (BS-VI) தரத்திலான 3,000 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு 471.53 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டது.
- மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களில் உள்ள பழைய வாகனங்களுக்கு மாற்றாக புதிய பேருந்துகள் அறிமுகப் படுத்தப்படும்.
- கலைஞர் கனவு இல்லம் திட்டத்தைச் செயல்படுத்த 469.84 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டது.
- இந்தத் திட்டமானது ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் மேற் கொள்ளப் படும்.

# தேசியச் செய்திகள்

## LEAPS 2025 முன்னெடுப்பு

- புது டெல்லியில் நடைபெற்ற PM GatiShakti திட்டத்தின் 4 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போது மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஆனது LEAPS 2025 முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியது.
- LEAPS (தளவாடங்களின் சிறந்து விளங்குதல், மேம்பாடு மற்றும் செயல்திறன் காப்பு) என்பது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறையின் (DPIIT) தலைமையிலானது.
- இந்த முன்னெடுப்பானது தளவாடச் செயல்திறனை தரப்படுத்துதல், புதுமைகளை ஊக்குவித்தல் மற்றும் NLP (தேசிய தளவாடக் கொள்கை) மற்றும் PM GatiShakti

திட்டத்துடன் ஒருங்கிணைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- LEAPS 2025 முன்னெடுப்பானது சரக்கு சேவைகள், கிடங்கு, MSME (குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள்), புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உட்பட 13 விருதுப் பிரிவுகளை உள்ளடக்கியது.
- இது பசுமை தளவாடங்கள், ESG (சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை) நடைமுறைகள் மற்றும் அரசு, தொழில்துறை மற்றும் கல்வித் துறைக்கு இடையேயான ஒத்துழைப்பை வலியுறுத்துகிறது.




## Fare se Fursat திட்டம்




- அலையன்ஸ் ஏர் நிறுவனமானது, 'Fare se Fursat' என்ற நிலையான விமானக் கட்டணத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- முன்பதிவு தேதியைப் பொருட்படுத்தாமல் மாறாமல் இருக்கும் நிலையான ஒற்றைக் கட்டணத்தை இந்த திட்டம் வழங்குகிறது.
- மலிவு விலையிலான பிராந்திய விமானப் பயணத்தை ஊக்குவிப்பதற்காக இது உடான் (உதே தேஷ் கா ஆம் நாக்ரிக்) திட்டத்துடன் ஒருங்கிணைகிறது.
- இந்தத் திட்டமானது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்களில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.
- ஏற்ற இறக்கமான விமானக் கட்டணங்களினால் ஏற்படும் மன அழுத்தத்தை குறைப்பதையும் கடைசி நிமிடப் பயணத்தை ஊக்குவிப்பதையும் இந்த முன்னெடுப்பு

நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 'நயே பாரத் கி உடான்' என்ற முழக்கத்தின் கீழ் நிலையான கட்டண மாதிரி "ஒரு பாதை, ஒரு கட்டணம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் அணியக் கூடிய பண வழங்கீட்டு வசதி




- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மூலம் காப்பு செய்யப்பட மியூஸ் வியரபல்ஸ் நிறுவனமானது இந்தியாவின் முதல் அணியக்கூடிய வகையிலான பண வழங்கீட்டு சூழல் அமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு இந்திய தேசியக் கொடுப்பனவுக் கழகத்துடன் (NPCI) கூட்டு சேர்ந்துள்ளன.
- இந்த அமைப்பானது, பயனர்கள் NFC (அருகமைந்த தகவல் தொடர்பு) மூலம் இயக்கப் பட்ட POS முனையங்களின் மீது தட்டுவதன் மூலம் 'Ring One' என்ற ஸ்மார்ட் மோதிரத்தினைப் பயன்படுத்தி பணம் செலுத்த உதவுகிறது.
- பரிவர்த்தனைகளுக்கு தொலைபேசி, அட்டை அல்லது பண சேமிப்புத் தளம் எதுவும் தேவையில்லை என்பதோடு மேலும் இந்த மோதிரம் அணிந்திருக்கும் போது மட்டுமே பணம் செலுத்த முடியும்.
- மியூஸ் வாலட் ஆனது எந்த RuPay அட்டையையும் இந்த மோதிரத்திற்குள் உள்ள செக்யூர் எலிமென்ட் (SE) சில்லில் சேமிக்கப்பட்ட குறியீடாக மாற்றுவதற்கு RuPay அட்டை அமைப்பைப் பயன்படுத்துகிறது.
- SE சில்லு வன்பொருள் நிலையிலான பாதுகாப்பை உறுதி செய்வதோடு, தொலைபேசி அல்லது செயலிகளிலிருந்து அட்டைத் தரவைத் தனிமைப்படுத்துகிறது.
- இந்த தளமானது, குறிப்பாக இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் உள்ள பயனர்களுக்குப் பாதுகாப்பான டிஜிட்டல் கட்டணங்களை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மோதிரம் அகற்றப்பட்டால், தொலைந்து விட்டால் அல்லது திருடப் பட்டால், பரிவர்த்தனைகள் ஆனது பாதுகாப்பிற்காக உடனடியாக முடக்கப்படும்.

## 2026 ஆம் ஆண்டில் நாடு தழுவிய குடும்ப வருமானக் கணக்கெடுப்பு

- புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தேசிய குடும்ப வருமானக் கணக்கெடுப்பை (NHIS)

தொடங்க உள்ளது.

- NHIS என்பது வீட்டு வருமானத்தை அளவிடுவதற்கும், நீண்ட காலத் தரவு இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் இந்திய அளவிலான கணக்கெடுப்பாகும்.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது வாழ்க்கைச் சூழல்கள், வருமானம் மற்றும் செலவு முறைகள் பற்றிய தரவை வழங்கி, கொள்கை வகுத்தல் மற்றும் பொருளாதாரப் பகுப்பாய்வை ஆதரிக்கும்.




## இந்திய நீர் மற்றும் நதிகள் மன்றம் 2025




- 2025 ஆம் ஆண்டு இந்திய நீர் மற்றும் நதிகள் மன்றம் என்பது நீர் மேலாண்மை, சுற்றுச்சூழல் சமூக மற்றும் ஆளுகை (ESG) ஆபத்து குறைப்பு மற்றும் நதிப் படுகை அளவிலான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் ஒரு தேசிய தளமாகும்.
- இது ஐக்கிய நாடுகளின் உலகளாவிய ஒப்பந்த தலைமை நிர்வாக அதிகாரி (UNGC CEO) நீர்க் கொள்கை, Water Resilience கூட்டணி, நீர் மேலாண்மைக்கான கூட்டணி (AWS) மற்றும் உலக வள நிறுவனம் (WRI) - இந்தியா ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப் பட்டது.

- இந்தியாவின் முக்கிய நதிப் படுகைகளில் பருவநிலை மாற்றம், நகரமயமாக்கல் மற்றும் பிரித்துக் காணப்படும் நீர் நிர்வாகம் போன்ற சவால்களை இந்த மன்றம் கையாண்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் டிஜிட்டல் பண வழங்கீட்டு முன்னெடுப்புகள்




- உலகளாவிய நிதி சார் தொழில்நுட்ப நிறுவனங்கள் விழாவில் இந்திய ரிசர்வ் வங்கியானது நான்கு புதிய பண வழங்கீட்டு முன்னெடுப்புகளை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்த முன்னெடுப்புகளில், பண வழங்கீட்டு உதவி மற்றும் தகராறு தீர்வுக்கான செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுக உதவி அடங்கும்.
- இணைய உலக இணைப்பிலான அமைப்புகள் மூலமான கட்டணங்கள் ஆனது கார்கள் மற்றும் திறன்மிகு தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்ற இணைக்கப்பட்ட சாதனங்களிலிருந்து பரிவர்த்தனைகளை செயல்படுத்துகின்றன.
- பேங்கிங் கனெக்ட் நிறுவனமானது தடையற்ற கட்டணங்கள் மற்றும் வணிகர்களை இணைத்தல் ஆகியவற்றிற்கு ஒன்றோடொன்று இணைந்து இயங்கக்கூடிய இணைய வங்கியை வழங்குகிறது.
- UPI ரிசர்வ் பே வசதியானது பயனர்கள் கடன் வரம்புகளை குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பாதுகாப்பாக நிர்வகிக்க அனுமதிக்கிறது.
- இந்த நடவடிக்கைகள் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்துவதையும் இந்தியாவில் டிஜிட்டல் கட்டணங்களை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## இந்தியாவில் உள்ள பெண் தொழிலாளர் வளம்

- இந்தியாவில், 2017–18 ஆம் ஆண்டில் 23 சதவீதமாக இருந்த பெண் தொழிலாளர் வளப் பங்கேற்பு ஆனது 2023–24 ஆம் ஆண்டில் தோராயமாக 42 சதவீதமாக உயர்ந்தது.
- உலக வங்கி தரவுகளின்படி, கடந்த பத்தாண்டுகளில் பிரிக்ஸ் நாடுகளிடையே பெண் தொழிலாளர் வளப் பங்கேற்பில் இந்தியா மிக உயர்ந்த அதிகரிப்பைப் பதிவு செய்து உள்ளது.
- பெண்களுக்குத் திறன்கள், கடன் மற்றும் முறையான வேலைவாய்ப்புக்கான அணுகலை மேம்படுத்தும் கொள்கை நடவடிக்கைகளே இந்த உயர்வுக்குக் காரணம்

ஆகும்.

- அரசாங்க முன்னெடுப்புகளில் 730 நாட்கள் அளவிலான குழந்தைப் பராமரிப்பு விடுப்பு, 180 நாட்கள் அளவிலான மகப்பேறு விடுப்பு மற்றும் அரசுப் பணியில் அவர்களின் வாழ்க்கைத் துணைவர்களுக்கு ஒரே இடத்தில் பணி நியமனம் ஆகியவை அடங்கும்.
- அரசு வேலைகளில் அதிக பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதற்காக போட்டித் தேர்வுகளுக்கான கட்டணத்திலிருந்து பெண்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது.
- சட்டம், மருத்துவம், ஆலோசனை மற்றும் தங்குமிடச் சேவைகளை வழங்குகின்ற ஒற்றைத் தீர்வு மையங்கள் வன்முறையை எதிர்கொள்ளும் பெண்களுக்கு ஒருங்கிணைந்த ஆதரவை வழங்குகிறது.





## சுற்றுச்சூழல் செய்திகள்

### IUCN அமைப்பின் பசுமை அந்தஸ்து மதிப்பீடு



- ஆசியாவில் உள்ள அதன் பூர்வீக வாழ்விடத்தின் பெரும்பகுதியில் புலிகளை 'அதிகளவில் குறைந்துவிட்ட இனமாக' IUCN வகைப்படுத்தியுள்ளது.
- புதிய பசுமை அந்தஸ்து மதிப்பீடு, இனங்களின் மீட்பு மற்றும் வளங்காப்பு வெற்றியை மதிப்பிடுவதன் மூலம் செந்நிறப் பட்டியலுக்கான ஒரு நிரப்புக் கூறாக உள்ளது.
- தற்போது பல பகுதிகளில் பிராந்திய ரீதியாக அழிந்துவிட்டன அல்லது மிக அருகி வரும் நிலையில் உள்ளதுடன் புலிகள் கடுமையான பரவல் இழப்பையும் எண்ணிக்கைச் சரிவையும் சந்தித்துள்ளன.

### IUCN பட்டியலில் இந்திய ஓநாய்களின் வளங்காப்பு நிலை




- IUCN அமைப்பானது முதல் முறையாக இந்திய ஓநாய்களை (கேனிஸ் லூபஸ் பால்லிபேஸ்) தனித்தனியாக மதிப்பிட்டுள்ளது.
- இந்திய ஓநாய் ஆனது கேனிஸ் இனத்திற்குள் ஒரு தனித்துவமான இனமாக இருக்கலாம் என்று இது அறிவுறுத்துகிறது.
- இந்தியா மற்றும் பாகிஸ்தானில் காணப்படும் இந்திய ஓநாய்களின் எண்ணிக்கை ஆனது சுமார் 3,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- வாழ்விட இழப்பு மற்றும் துன்புறுத்தல்கள் காரணமாக இந்த இனமானது எளிதில் பாதிக்கப் படக் கூடியதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- அதன் பரவலில் 12.4 சதவீதம் மட்டுமே பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்குள் உள்ளது.

## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### கடல் சார் பொருளாதாரம் குறித்த நிதி ஆயோக் அறிக்கை

- "India's Blue Economy: Strategy for Harnessing Deep-Sea and Offshore Fisheries" என்ற தலைப்பில் நிதி ஆயோக் ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- 2 மில்லியன் சதுர கிலோ மீட்டருக்கும் அதிகமான பரப்பளவு கொண்ட இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் (EEZ) ஆழ்கடல் மீன்வளத்தை விரிவுபடுத்துவதற்கான ஒரு கட்டமைப்பை இந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- உலகளாவிய உற்பத்தியில் 8% பங்களிப்புடன் இந்தியா மீன் உற்பத்தியில் உலகளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது என்பதோடு சுமார் 30 மில்லியன் வாழ்வாதாரங்களை இது ஆதரிக்கிறது.

- 2023–24 ஆம் நிதியாண்டில் மீன்வள ஏற்றுமதி 60,523 கோடி ரூபாயை ஈட்டியது என்ற நிலையில் கண்டத் திட்டுகளுக்கு அப்பால் உள்ள ஆழ்கடல் மீன் வளமானது பெரும்பாலும் பயன்படுத்தப்படவில்லை.
- EEZ ஆனது மரபார்ந்த மற்றும் மரபுசாரா கடல் வளங்களிலிருந்து 7.16 மில்லியன் டன்கள் பயன்களைக் கொண்டுள்ளது.
- இங்கு 6 முக்கியத் திட்டங்களில் கொள்கைச் சீர்திருத்தம், நிறுவனத் திறன், மீன்பிடி நிறுவனங்களின் நவீனமயமாக்கல், நிலையான மேலாண்மை, நிதி மற்றும் சமூக பங்கேற்பு ஆகியவை அடங்கும்.
- மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொகுப்பு அடிப்படையிலான அணுகுமுறைகள் மூலம் உள்ளடக்கிய வகையிலான மீன்பிடி நிறுவன மேம்பாட்டை அறிக்கை முன் மொழிகிறது.
- இதில் முதலீட்டு மதிப்பீடுகளுடன், முதல் கட்டம் (2025–28), இரண்டாம் கட்டம் (2029–32), மற்றும் மூன்றாம் கட்டம் (2033 ஆம் ஆண்டு முதல்) என கட்டம் கட்டமாக திட்டமிடப் பட்ட செயல் திட்டமானது குறிப்பிட்டுக் காட்டப் பட்டுள்ளது.





## உலகளாவிய நோய் பாதிப்பு ஆய்வு 2023

- 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய ஆயுட்காலம் பெண்களுக்கு 76.3 ஆண்டுகள் மற்றும் ஆண்களுக்கு 71.5 ஆண்டுகள் ஆகும்.
- 204 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் 1950 ஆம் ஆண்டு முதல் வயது சார்ந்து தரநிலைப் படுத்தப் பட்ட இறப்பு விகிதம் 67% குறைந்துள்ளது.
- தொற்று அல்லாத நோய்கள் (NCD) ஆனது மொத்த உலகளாவிய இறப்புகள் மற்றும் குறைபாடுகளில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கை ஏற்படுத்துகின்றன.
- உலகளாவிய இறப்புகள் மற்றும் குறைபாடுகளில் சுமார் பாதியளவு 88 மாற்றி அமைக்கக் கூடிய ஆபத்து காரணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.
- 2021 ஆம் ஆண்டில் இறப்புக்கான முக்கிய காரணமாக இருந்த COVID-19 ஆனது 2023

ஆம் ஆண்டில் 20 வது இடத்திற்கு சரிந்தது.


- இந்தியா இஸ்கிமிக் இதய நோய், பக்கவாதம் மற்றும் நாள்பட்ட சுவாச நோய்களின் அதிக பாதிப்பினை எதிர்கொள்கிறது.
- காற்று மாசுபாடு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவை இந்தியாவில் முக்கிய சுகாதார அபாயங்களாகவே உள்ளன.
- தொற்று நோய்களைக் குறைப்பதில் இந்தியா முன்னேற்றம் அடைந்திருந்தாலும், அதிகரித்து வரும் NCD தொற்றுகளுடன் தொடர்ந்து போராடி வருகிறது.
- இது 'தி லான்செட்' என்ற மருத்துவ இதழில் வெளியிடப்பட்டது.




## உலகளாவிய மீள் எழுச்சி நிலை அறிக்கை 2025


- இந்த அறிக்கையை எக்ஸிடர் பல்கலைக்கழகம் வெளியிட்டது.
- புவி வெப்பமடைதல் ஆனது 1.5 டிகிரி செல்சியஸைத் தாண்டும் என்று கணிக்கப் பட்டு உள்ளது என்ற நிலையில் இது புவியை மீளமுடியாத பல மீள் எழுச்சி/ உச்ச கட்ட மாற்ற நிலைகளை நோக்கித் தள்ளும்.
- வெதுவெதுப்பான நீர் பகுதிகளில் காணப்படும் பவளப்பாறைகள் ஏற்கனவே 1.2 டிகிரி செல்சியஸுக்கு அருகில் அதன் வெப்ப மிகு வளர்ச்சி நிலையை கடந்துவிட்டன.
- அமேசான் மழைக்காடுகள் 2 டிகிரி செல்சியஸுக்குக் கீழே பரவலாக அழிந்து வருகின்றன என்ற நிலையில் இது 100 மில்லியனுக்கும் அதிகமான மக்களை ஆபத்தில் ஆழ்த்துகிறது.
- அட்லாண்டிக் மெரிடியனல் ஓவர்டர்னிங் சர்குலேஷன் (AMOC) என்ற பெருங்கடல் நீரோட்டம் ஆனது குறையும் அபாயத்தில் உள்ளது என்ற நிலையில் இது உலகளாவிய உணவு மற்றும் நீர் பாதுகாப்பை அச்சுறுத்துகிறது.
- இந்த உச்ச கட்ட நிலைகள், நிலையற்ற வழிகளில் ஒன்றோடொன்று தொடர்பு கொள்வதால், அடுக்கடுக்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கங்களை மேலும் உருவாக்குகின்றன.
- மீள முடியாத விளைவுகளைத் தடுக்க உலகளாவிய பசுமை இல்ல வாயு உமிழ்வானது 2030 ஆம் ஆண்டில் பாதியாகக் குறைக்கப்பட்டு 2050 ஆம் ஆண்டில் நிகரச் சுழிய நிலையை அடைய வேண்டும்.

- தற்போதைய தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்டப் பங்களிப்புகள் (NDCs) ஆனது போதுமானதாக இல்லை என்ற நிலையில் இது 2 டிகிரி செல்சியஸுக்கு மேலான வெப்ப மயமாதலுக்கு வழி வகுக்கும்.
- கிரீன்லாந்து மற்றும் மேற்கு அண்டார்டிகாவில் தாழ் வெப்ப மண்டல மிகு வளர்ச்சி நிலைகள் ஏற்கனவே நிகழ்ந்து கொண்டிருக்கலாம்.




# மாநிலச் செய்திகள்

## முதல் QR வழியான அபராதம் செலுத்தும் முனையம்




- குருகிராம் நகரமானது, போக்குவரத்து அபராதங்களை டிஜிட்டல் முறையில் செலுத்துவதற்காக இந்தியாவின் முதல் QR குறியீடு அடிப்படையிலான முனையங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஓட்டுநர்கள் தங்கள் வாகன எண்ணை உள்ளிட்டு QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் நிலுவையில் உள்ள அபராதங்களை சரிபார்த்து செலுத்தலாம்.
- 90 நாட்களுக்கு மேல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அல்லது நிலுவையில் உள்ள அபராத கட்டணங்களை இந்த முனையத்தில் செலுத்த முடியாது.

- இந்த முன்னெடுப்பானது குருகிராம் காவல்துறை மற்றும் குருகிராம் பெருநகர மேம்பாட்டு ஆணையத்தின் பெரு நிறுவனச் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## நீலக் கொடி அந்தஸ்து பெற்ற கடற்கரைகள் - மகாராஷ்டிரா




- மகாராஷ்டிராவில் உள்ள ஐந்து கடற்கரைகள் சர்வதேச நீலக் கொடி சான்றிதழைப் பெற்றன.
- அவற்றில் ராய்காட்டில் உள்ள ஸ்ரீவர்தன் மற்றும் நாகான், பால்கரில் உள்ள பர்னகா, ரத்னகிரியில் உள்ள குஹாகர் மற்றும் லட்கர் ஆகியவை அடங்கும்.
- நீலக் கொடி அந்தஸ்தானது டென்மார்க்கின் சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளையால் வழங்கப்படுகிறது.
- இந்தச் சான்றிதழைப் பெற தூய்மை, பாதுகாப்பு, நீர் தரம் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்த 33 தரநிலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

## கோமதி நதி புத்துயிர்ப்புத் திட்டம்




- உத்தரப் பிரதேச முதலமைச்சர் கோமதி நதியின் தூய்மையான மற்றும் தொடர்ச்சியான ஓட்டத்தை மீட்டெடுப்பதற்காக கோமதி நதி புத்துயிர்ப்புத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளார்.

- பிலிபிட் முதல் காஜிபூர் வரையில், கோமதி நதியில் பாயும் நகர்ப்புறக் கழிவுநீரில் 95 சதவீதத்தினை தடுப்பதை நோக்கமாகக் கொண்டு இது தொடங்கப்பட்டுள்ளது.
- தற்போது, 39 முக்கிய வடிகால்கள் இந்த நதியில் பாய்கின்றன என்ற நிலையில் அவற்றுள் 13 சுத்திகரிக்கப் படாமல் ஆற்றில் பாய்கின்றன; இவை புதிய மற்றும் மேம்படுத்தப் பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் திருப்பி விடப்படும் அல்லது சுத்திகரிக்கப்படும்.
- இந்தத் திட்டத்தில் ஈரநில மேம்பாடு, ஆற்றங்கரை அழகுபடுத்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் ஆற்றங்கரைகளில் பசுமைப் பரப்பை விரிவுபடுத்துதல் ஆகியவை அடங்கும்.

# இதரச் செய்திகள்

## கேம்பி ஃப்ளெக்ரே எரிமலை




- கேம்பி ஃப்ளெக்ரே எரிமலையில் வழக்கமான கண்டறிதல் அமைப்புகள் 12,000 நில நடுக்கங்களை மட்டுமே கண்டறிந்துள்ளதுடன், செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்பானது 2022 முதல் 2025 ஆம் ஆண்டு வரை 54,000 க்கும் மேற்பட்ட நில நடுக்கங்களைக் கண்டறிந்தது.
- போசுவோலியைச் சுற்றி ஒரு தெளிவான வளைய வடிவப் பிளவு கண்டறியப்பட்டது, என்ற நிலையில் அங்கு நிலமானது ஆண்டுதோறும் சுமார் 10 சென்டிமீட்டர் (4 அங்குலம்) உயர்ந்து வருகிறது.
- போசுவோலியின் நிலப்பரப்பிற்கு அடியில் இரண்டு மறைக்கப்பட்ட பிளவுகள் ஒன்றிணைந்து காணப்பட்டன என்ற நிலையில் இது 5 ரிக்டர் அளவிலான நில நடுக்கங்களுக்கான சாத்தியத்தை அதிகரித்தது.
- கண்டறியப்பட்ட அனைத்து நிலநடுக்கங்களும் 4 கிலோ மீட்டருக்கும் (2.5 மைல்கள்) குறைவான ஆழத்தில் நிகழ்ந்ததுடன் ஆழமற்றவையாக / உள்ளீடாக இல்லாமல் உள்ளன.
- பாறைக் குழம்பு ஆனது மேற்பரப்பை நோக்கி நகர்வதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்பதால் உடனடி வெடிப்பு அறிகுறிகள் எதுவும் இல்லை என்பதைக் குறிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★